## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 09 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்புக் கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி என்ற இரண்டில் குறைந்த பெறுமதியில் பெறுமதியிட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் | கணிப்பீடு செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் இருப்புக் கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி என்ற இரண்டில் குறைந்த பெறுமதியில் பெறுமதியிடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திரவ குளோரின் இருப்பு தேறிய தேறக்கூடிய பெறுமதியல்லாமல் கிரயத்தில் காண்பிக்கப்பட்டிருந்ததடன் கோஸ்டிக்சோடா இருப்பு, கிரயத்தைக் கவனத்தில் கொள்ளாமல் தேறிய தேறக்கூடிய பெறுமதியில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக இறுதியிருப்பு மற்றும் இலாபம் ரூபா 946,272 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் இழிவுப்பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்ய வேண்டியிருந்ததுடன் எதிர்பாாக்கப்பட்ட நிலைமையில் மதிப்பீடுகளில் மாற்றங்கள் ஏற்படுமாயின் வேறுபாடுகள் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றமாக கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவழிக்கப்பட்ட பெறுமதி ரூபா 167,008,552 ஆன கம்பனியின் 11 சொத்து வகைகளுக்குரிய 3,851 விடயங்களின் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் அவ்வாறு மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்காக அரசாங்கத்தின் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்களின் இழிவுப்பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்ய வேண்டியிருந்ததுடன் எதிர்பாாக்கப்பட்ட நிலைமையில் மதிப்பீடுகளில் மாற்றங்கள் ஏற்படுமாயின் வேறுபாடுகள் கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றமாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட எனினும் தற்போதும் பயன்படுத்தப்படுகின்ற கிரயம் ரூபா 239,531,004 கூட்டுத்தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண வகைகள் 06 இல் 2674 அலகுகளின் இழிவுப் பெறுமதி இலங்கை கணக்கீட்டு | சரிசெய்யப்படும். | முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட எனினும் தற்போதும் பயன்படுத்தப்படுகின்ற ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் இழிவுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் |

| | | | |
|---|---|---|---|
| | நியம இலக்கம் 16 இன் 79 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | | வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் 42 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய காலப்பகுதியின் வழுக்களைத் திருத்தும் போது ஒப்பீட்டு ரீதியிலான பெறுமதிகளை மீண்டும் வெளியிட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மீண்டும் வெளியிடாமல் முன்னைய காலப்பகுதிக்குரிய ரூபா 30,228,323 கூட்டுத்தொகையான 03 தவறுகள் சீராக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | முன்னைய காலப்பகுதியின் வழுக்களைத் திருத்தும் போது ஒப்பீட்டு ரீதியிலான பெறுமதிகளை மீண்டும் வெளியிடல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கணிப்பிடல் வழுவின் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் பணிக்கொடை செலவினம் மற்றும் பணிக்கொடைகளுக்கான நிதிஏற்பாடுகள் கணக்கின் மீதி ரூபா 901,512 இனால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் பணிக்கொடைகளுக்கான நிதிஏற்பாடுகள் கணக்கின் ஆரம்ப மீதி நாட்குறிப்புக்களின் மூலம் ரூபா 1,618,962 வரவு வைத்து நிறுத்திவைத்த உழைப்புக்கள் அப்பெறுமானத்தால் செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. நிதிக்கூற்றுக்களில் சரியாக காண்பிக்க வேண்டியிருந்ததுடன் நாட்குறிப்புக்களுக்குரிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | சரிசெய்து சமர்ப்பிக்கப்படும். | ஊழியர் பணிக்கொடை செலவினம் மற்றும் பணிக்கொடைகளுக்கான நிதிஏற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் சரியாக காண்பிக்க வேண்டியிருந்ததுடன் நாட்குறிப்புக்களுக்குரிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய பிற்போட்ட வரிப் பொறுப்புக்கள் ரூபா 57,707,776 ஆக இருந்த போதிலும் அது ரூபா 106,979,920 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் வரிச் செலவினம் மற்றும் பிற்போட்ட வரிப் பொறுப்புக்கள் ரூபா 49,272,144 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்து சமர்ப்பிக்கப்படும். | ஆண்டிற்குரிய பிற்போட்ட வரிப் பொறுப்புக்கள் கணிப்படப்பட்டு சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டின் போது கம்பனியால் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு விநியோகிக்கப்பட்ட 900kg குளோரின் சிலின்டர் 856 இற்காக கப்பல் கட்டணம் அலகு ஒன்று ரூபா 20,000 வீதம் காண்பிக்கப்பட்ட விலைப் பட்டியலின் பெறுமதியில் அலகு ஒன்றிற்காக ரூபா 13,104 மாத்திரம் கிடைத்திருந்ததுடன் மேலும் கிடைக்க வேண்டிய வியபாரக் கடன் பட்டோர் மீதியான ரூபா 5,902,976 கிடைக்க பெறாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக இழப்பீட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ரூபா 13,104 தொகை எங்களுக்கு செலுத்த வேண்டும் என இணங்கியதை அறிவித்துள்ளது. இது தொடர்பாக எமது நிறுவனத்தின் பெறுகைக் குழுவிற்கு சமர்ப்பித்து தீர்மானம் எடுத்து அந்த தீர்மானம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும். | அறவிடல் நிச்சயமற்ற நிலைமையில் காணப்படுகின்ற கடன்பட்டோர் மீதி தொடர்பாக இழப்பீட்டு ஒதுக்கம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| குளோரின் சிலிண்டர்களுக்கு உரிய திரண்ட பெறுமானத் தேய்வு பெறுமதி | 282,928,278 | 284,110,278 | 1,182,000 | சரி செய்யப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதியுடன் இணக்கம் செய்தல் வேண்டும். |

### 1.5.4 நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 705,363,700 ஆன குளோரின் விற்பனை வருமானத்தில் 90 சதவீதம் அதாவது ரூபா 632,838,000 தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு மேற்கொள்ளப்பட்ட விற்பனைகளில் இருந்து கிடைத்திருந்த போதிலும் அந்த நிறுவனத்துடன் எழுத்து மூல உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருக்கவில்லை. மேலும் ஒரு கொள்வனவாளர் என்ற அடிப்படையில் மாத்திரம் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டமையும் புதிய கொள்வனவாளர்கள் கவனம் செலுத்தாமையின் அடிப்படையில் எதிர்காலத்தில் வியாபார ஆபத்து ஒன்று காணப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | வெளி கொள்வனவாளர்களில் ஏற்றுமதித் துறையில் ஈடுபட்டிருக்கின்றமையினால் திரவ குளோரின் இறக்கும் செய்யும் போது வரிகளில் இருந்து விடுவித்து குளோரின் இறக்குமதி செய்யும் இயலுமை காணப்படுகின்றது. அதனால் அவர்கள் மிகவும் குறைந்த விலையில் குளோரின் இறக்குமதி செய்கின்றமையினால் தனியார் கொள்வனவாளர்களில் 100 சதவீதமும் எம்மிடம் இருந்து குளோரின் கொள்வனவு செய்தல் வசதியீனமாகக் காணப்படுகின்றது. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மொத்த குளோரின் தேவையை வழங்குதல் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகின்றது. தற்போது பரந்தன் கோஸ்டிக் சோடா / குளோரின் இரசாயன தொழிற்சாலை ஸ்தாபிக்கும் ஆரம்ப வேலை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தேசிய கொள்கையின் அடிப்படையில் குளோரின் விநியோகிப்பதற்கு முடியும். | புதிய கொள்வனவாளர்களை கண்டறிவதற்காக பொருத்தமான வேலைத் திட்டம் ஒன்று ஏற்படுத்தப்படல் வேண்டும். கொள்வனவாளர்களுடன் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| கிரயத்தில் இருந்து அகற்றப்பட்ட ரூபா 824,200 ஆன கொள்கலன் மற்றும் சிலிண்டர் தொடர்பாக சிலிண்டர்களின் எண்ணிக்கை, கிரயம் அல்லது மீள் மதிப்பீட்டுப் பெறுமதி மற்றும் பெறுமானத் தேய்வு கணிப்பிடலும், ரூபா 4,336,500 ஆன வியாபாரக் கடன்பட்டோர் மீதி தொடர்பாக கிடைக்கின்றமையை உறுதிப் படுத்துவதற்கான சான்றுகள் மற்றும் ரூபா 17,214,000 ஆன சிலிண்டர் வைப்புத் தொடர்பான பற்றுச் சீட்டுக்கள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கொள்கலன் மற்றும் சிலிண்டர் எண்ணிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். வியாபாரக் கடன்பட்டோர் - தவணை ரீதியாக செலுத்தி பூர்த்தி செய்வதாக நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br>சிலிண்டர் வைப்பு – பற்றுச்சீட்டு சரிசெய்து எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும். | பெறுமதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 05 வருடங்களை விஞ்சிய ரூபா 3,387,445 ஆன கடன்பட்டோர் மீதி மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நோத்சீ லிமிட்டெட் மற்றும் தேசிய கடதாசிக் கம்பனிகளுக்காக தீர்த்து வைப்பதற்கு உள்ள பணத்தை கூடிய விரைவில் தீர்த்து வைப்பதற்காக மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 1,387,445 தொகையை பதிவழிப்பதற்காக மேலும் பின் ஆய்வு மேற்கொண்டு தகவல்கள் கண்டறிய வேண்டி உள்ளது. | கடன்பட்டோர் மீதிகளை தாமதம் இன்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூலின் 6.6 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 2025 ஒக்தோபர் 16 ஆந் திகதி அதாவது 07 மாதங்களும் 18 நாட்களும் தாமதத்தின் பின்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட வில்லை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்துரைத்த திகதியில் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 311,135,592 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 479,965,403 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 168,829,811 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு விற்பனை வருமானம் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் முறையே ரூபா 68,356,759 இனாலும், ரூபா 74,146,965 இனாலும் அதிகரித்தமையும் விற்பனைக் கிரயம், நிர்வாக மற்றும் தாபன செலவினங்கள் முறையே ரூபா 18,577,532 இனாலும், ரூபா 3,845,212 இனாலும் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| தேவைகள் தொடர்பாக சரியான மதிப்பீடு இல்லாமையின் அடிப்படையில் அளவினை விஞ்சி கோஸ்டிக் சோடா கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது பங்களாதேஷில் இருந்தும், இந்தியாவில் இருந்தும் கொள்வனவு செய்யப்பட்ட கிரயம் ரூபா 57,359,728 ஆன கோஸ்ட்டிக் சோடா 25 kg உறைகள் 7049, 2023 ஆகஸ்ட் 26, 2025 பெப்ரவரி 14, 15, 16 மற்றும் மார்ச் 22 ஆந் திகதி வரையில் காலாவதியாகி இருந்தது. அதில் 1938 உறைகள் கம்பனியின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக வைக்கப்பட்டதுடன் 5111 உறைகள் கணக்காய்வுத் திகதியான 2025 நவம்பர் வரையிலும் அதன் கிரயத்தினை விட குறைவாக ரூபா 19,180,500 தொகையில் விற்பனை செய்யப்பட்டமையால் கம்பனிக்கு ரூபா 22,213,872 நட்டம் ஏற்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது பங்களாதேஷ் இல் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இருப்பில் 2025 செப்தெம்பர் 02 ஆந் திகதி வரையில் கோஸ்டிக் சோடா செதில் 25 கிலோ கிராம் உறைகள் 1098 மாத்திரம் எஞ்சி இருந்ததுடன் அதன் தரத்தை பரீட்சித்த போது கோஸ்டிக் சோடா சதவீதம் சிறிதளவு மாத்திரம் குறைவடைந்து இருந்தது. அதனால் அந்த கோஸ்டிக் சோடா உறைகள், கோஸ்டிக் சோடா கரைசல் இடும் பணிகளுக்காக பயன்படுத்த முடியும். கோஸ்டிக் சோடா திரவத்தை விற்பனை செய்வதற்காக விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகள் தற்போது அமுல்படுத்தப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டின் போது இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கிலோ கிராம் 25 கோஸ்டிக் சோடா செதில் உறைகள் 408, 2025 செப்தெம்பர் 02 ஆந் திகதியில் களுத்துறைக் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தது. அதில் 408 உறைகள் எமது பிளீச்சின் திரவ உற்பத்திக்காக வைக்கப்பட்டுள்ளது. | தேவைகள் தொடர்பாக சரியான மதிப்பீடு செய்து கொள்வனவு செய்தல் வேண்டும். இந்த எஞ்சியிருந்த இருப்புக்களை பயன்படுத்தக் கூடிய வகையில் மாற்று வழித் திட்டங்களை கண்டறிந்து நட்டத்தினை குறைத்துக் கொள்ளல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| கம்பனியால் புளர்ட்டன் கர்மாந்தபுரயில் நடாத்திச் செல்லப்படுகின்ற கட்டிடத்தின் வாடகையாக களுத்துறை பிரதேச செயலகத்திற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 8,838,720 செலுத்தப்பட்டதுடன் 2025 ஆகஸ்ட் 17 ஆந் திகதி வரையிலும் அதற்குரிய எழுத்து மூல உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்துவதற்கு காணப்பட்ட சகல வாடகைப் பணமும் தற்போது செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அதன் உரித்துறுதியை பெற்றுக் கொள்ளும் பணிகளுக்காக தேவையான சகல எழுத்து மூல ஆவணங்களும் களுத்துறை பிரதேச செயலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | வாடகை தொடர்பாக எழுத்து மூல உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2025 யூலை 24 ஆந் திகதி வரையில் கம்பனியால் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு குளோரின் வழங்குவதற்காக அலகு ஒன்றின் விலை ரூபா 64,000 முதல் ரூபா 260,000 பெறுமதியான 1456 சிலிண்டர்கள் பயன்படுத்தப் பட்டதுடன் விநியோகிக்கப்படுகின்ற குளோரின் சிலிண்டர்களுக்காக வைப்புத் தொகை அறவிடாமையின் காரணமாக அந்த சிலிண்டர்களுக்கு ஏற்படுகின்ற இழப்பினை மீளளிப்புச் செய்ய முடியாதுள்ள ஆபத்து காணப்பட்டது. | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அரசாங்கத்திற்கு உரிய மக்கள் சேவை வழங்குகின்ற நிறுவனமாகும். அதன் காரணமாக ஆரம்பத்தில் இருந்து (30 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக) அந்த நிறுவனத்தில் இருந்து சிலிண்டர் கட்டணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவ்வாறே தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு அவர்களுக்கு சொந்தமான 900Kg சிலிண்டர் 126 அளவில் காணப்பட்டதுடன் பரந்தன் கம்பனியின் தொடர்ச்சியான மற்றும் பிரதான கொள்வனவாளர் ஆகும். | வழங்குனர்களுக்கு விநியோகிக்கப்படுகின்ற குளோரின் சிலிண்டர்களுக்காக வைப்புத் தொகை ஒன்றை அறவிடுவதன் மூலம் ஏற்படக் கூடிய இழப்பினை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இந்தியாவில் இருந்தும், பங்களாதேஷில் இருந்தும் இறக்குமதி செய்யப்படுகின்ற குடிநீரைச் சுத்திகரிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற குளோரின் அடங்கிய கலவை மற்றும் தரத் தன்மை தொடர்பாக அந்த நிறுவனத்தின் மூலம் வழங்கப்படுகின்ற சன்றிதழ் கம்பனியால் ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் அதில் அடங்கியுள்ள கலவை மனித பயன்பாட்டுக்கு பொருத்தமாக இருந்தமை மற்றும் உறுதிப்பாடு ஒன்று காண்பிக்கப்பட்டுள்ள கலவையில் குளோரின் உள்ளடங்கி இருக்கின்றமையை உறுதிப்படுத்துவதற்காக சுயாதீன பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திரவ குளோரின்களின் தரத் தன்மையை அளவிடுவதற்கு இலங்கையில் எந்த ஒரு நிறுவனத்திற்கும் வசதிகள் காணப்படாது இருந்ததுடன் உற்பத்தி செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது வழங்குனரின் பரிசோதனைக் கூடத்தில் இருந்து விநியோகிக்கப்படுகின்ற ஆய்வு கூட அறிக்கையின் அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எனினும் அந்த அளவு போதியளவில் இல்லாமை என்ற விடயத்தை தீர்வாக திரவ குளோரினுக்காக மூன்றாவது தரப்பினரால் விநியோகிக்கப்படுகின்ற தரச் சான்றிதழ் சமர்ப்பிக்குமாறும் அந்த பெறுகை ஆவணங்களின் நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | நீர் சுத்திகரிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற குளோரின் அடங்கிய கலவை மற்றும் தரத் தன்மை மனிதப் பாவணைக்கு பொருத்தமானது என உறுதிப்படுத்துவதற்காக சுயாதீனமான பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். |